# சீனாவில் – கர்த்தருடைய வார்த்தையைக் குறித்த பாரம்






**கனடாவிலுள்ள பைபிள் பிலீவர்ஸ் (Bible Believers)** சபையினரால் வெளியிடப்பட்ட **"விசுவாச அறைகூவல், மே 2020"** பத்திரிகையிலிருந்து இந்தக் கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது

2020-ம் ஆண்டு துவக்கம் முதலே எல்லாருடைய கண்களும் சீனாவை நோக்கியே திரும்பியிருந்தன என்பதை நாம் அறிவோம். சீனாவிலிருந்து தோன்றிய ஒரு வைரசால் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டார்கள், அது ஒருபுறமிருக்க இயேசு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களும் கூட அங்கே நிகழ்ந்தவண்ணம் தான் இருந்தன. அது ஒரு வைரசைப் பற்றியதோ அல்லது கம்யூனிஸத்தைப் பற்றியதோ அல்ல. அது இந்த மணிநேரத்திற்காக தேவனைக் குறித்த ஒரு தரிசனத்தை உடைய ஒரு சகோதரனைப் பற்றியதாகவே இருந்தது.

நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ளப் போகிற இந்த குறுஞ்செய்தியின் மூலமாக, சீனா தேசத்திலுள்ள பாஸ்டர், சகோதரன் காலேப் அவர்களின் இருதயத்தில் கர்த்தருடைய வேலையைக் குறித்து எவ்வளவு அதிக பாரம் இருக்கிறது என்றும், அவருடைய இருதயத்தில் கொழுந்து விட்டு எரிகிற வாஞ்சையையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். அவர் மார்ச்

12, 2020 அன்று கைது செய்யப்படுவதற்கும் இரண்டு நாட்களுக்கு முன்பு, அனுப்பப்பட்ட ஒரு குறுஞ்செய்தியின் மூலமாக (text message) அவருடைய சிறைவாசத்தைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் அவரிடம் பேசினார், அந்நேரத்தில் அநேகமாக அவருக்கோ அவருடைய சபையாருக்கோ அது தெரியாமலே இருந்தது.



*இடது பக்கத்திலிருந்து: சகோ. மர்பி வோங், சகோ. டாம் ரே, சகோ. ரான் ஸ்பென்சர் மற்றும் சகோ. காலேப்*

சட்டத்திற்கு புறம்பாக, சீன மொழி கிங் ஜேம்ஸ் வேதாகமங்களை விநியோகித்ததாகவும், செய்தியை அச்சிட்டதாகவும், குற்றம்சுமத்தி, இப்பொழுது ஏறக்குறைய மூன்று மாதங்களாக அவர் சிறையில் இருந்து வருகிறார், (இந்த பத்திரிகை மே 2020ல் வெளியிடப்பட்டது). அவரோடு கூட வேறு இரண்டு சகோதரர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் வழக்கு விசாரணை தேதியும் அறிவிக்கப்படவில்லை. அந்த இரண்டு காரியங்களும், மாகாணத்தின் பாதுகாப்புக்கு இடர்விளைவிக்கக்கூடியதாக கருதப்பட்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றம் நிரூபிக்கப்படும்

பட்சத்தில், அவர்கள் மிகக் கடுமையான தண்டனையாக, அநேக வருட சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

இந்தச் செய்தியானது சகோ. காலேப் அவர்களின் சபையிலுள்ள ஒரு விசுவாசியிடமிருந்து 2020, ஏப்ரல் மாத கடைசி வாக்கில் எனக்குக் கிடைத்தது. அவர் சீனாவிலுள்ள இணைய தகவல்களை தணிக்கை செய்து (internet censorship) அனுப்புவதை நிர்வகித்து வருகிறார்.

நீங்கள் இந்தச் செய்தியிலுள்ள (text message) உள்ளடக்கத்தை ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நான் இப்பொழுது அநேக நாட்களாக கண்ணீரோடு கூட ஆழ்ந்து யோசித்துப் பார்த்து, கர்த்தருடைய வேலைக்காக, கொழுந்துவிட்டு எரிந்து, நான் எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் இன்னும் அதிகமாக என்னுடைய ஜீவியத்தை, மறுபிரதிஷ்டை பண்ணும்படியாக இதை சிந்தித்துப் பார்க்கிறேன். இக்கடைசி கால செய்தியானது தேவனுடைய ஒவ்வொரு வித்திற்கும் போய்ச்சேர வேண்டுமென்று நான் எப்பொழுதும் இருந்ததைக்காட்டிலும் அதிகமாக தீர்மானித்து விட்டேன்.

சகோதரன் காலேப் - அவர்களுடைய மெசேஜ்-ஐ கீழே கொடுத்திருக்கிறேன். அவர் கைது செய்யப்படுவதற்கும் இரண்டு நாட்களுக்கு முன்பு, அங்கு கடைசிகால செய்தியை மொழிபெயர்த்து, அச்சிடும் வேலையை செய்து கொண்டிருந்த அவருடைய சபையிலுள்ள உடன்ஊழியக்காரர்களில் சிலருக்கு அவர் இதை அனுப்பினார்:

**“எங்களுடைய சொந்த பாதுகாப்பை ஒருபொருட்டாக எண்ணாமல், நாங்கள் இந்த வேலையைத் தொடர்ந்து செய்வோம் என்று நாங்கள் சொல்லுவோமானால், நான் இதை உங்களுக்கு**

ஞாபகப்படுத்துவது அவசியமாயிருக்கிறது. சகோதரர்களே, நீங்கள் கர்த்தருடைய வேலையை தொடர்ந்து செய்ய நான் விரும்புகிறேன்: மொழிபெயர்ப்பு பணியையும், அச்சிடும் பணியையும் தொடர்ந்து செய்யுங்கள். மனிதனைக் கட்டலாம், ஆனால் இந்த சுவிசேஷத்தைக் கட்ட முடியாது. 'இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; **தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை** (2 தீமோத்தேயு 2:9)'"

என்னால் இந்த வேலைகளை உம்மைத் தவிர வேறு யாரிடமும் நம்பிக்கையாக ஒப்படைக்க முடியவில்லை, ஏனென்றால் அவர்களுக்கு இந்தத் தரிசனம் கிடையாது.



*சகோ. எல்வியும் (இடது பக்கத்திலிருந்து இரண்டாவது இருப்பவர்) இந்நேரத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.*

நான் ஒருநாள் கைதுசெய்யப்பட்டால், நீர் (ஒரு குறிப்பிட்ட சகோதரன்) சபையை நடத்தும். பிரசங்கம் பண்ணுவதன் மூலமாகவோ அல்லது எச்சரிப்பு கொடுப்பதன் மூலமாகவோ சபையை நடத்துங்கள்,

**ஆனால் உண்மையாக மாத்திரம் இருங்கள். திறமை தேவனால் கொடுக்கப்பட்டது, ஆனால் உண்மையாக இருப்பவர்களுக்கு மாத்திரம்.**

**நீர் (வேறொரு சகோதரன்) மொழிபெயர்ப்பு பணியைத் தொடர்ந்து செய்ய நான் விரும்புகிறேன். இந்த வேலையை ஒருபோதும் நிறுத்தி விடாதீர்கள், ஆனால் வெகுவைராக்கியத்தோடு சுறுசுறுப்பாக தொடர்ந்து உறுதியோடு இவைகளை செய்யுங்கள்!**

**தேவன் நம்மைப் பாதுகாப்பார் என்று நான் விசுவாசிக்கிறேன், ஆனால் நாம் உபத்திரவங்களை அனுபவிக்க மாட்டோம் என்று அர்த்தமல்ல. இருந்த போதிலும், நாம் முடிவுபரியந்தம் உண்மையோடு இருப்போம்."**

நான் இந்த மொபைல் செய்தியை வாசித்த பிறகு, அது ஒரு சில வார்த்தைகளாக இருந்தாலும், அது என்னுடைய இருதயத்தை நடுக்கங்கொள்ளச் செய்துவிட்டது. "என்னால் இந்த வேலையை உம்மைத் தவிர வேறு யாரிடமும் ஒப்படைக்க முடியவில்லை, ஏனென்றால் அவர்களுக்கு இந்த தரிசனம் கிடையாது." அப்போது, நான் தாழ்மையோடு கூட, கர்த்தாவே, எனக்கு இந்தத் தரிசனம் இருக்கிறதா? என்று நினைத்தேன். அப்படியானால், என்னுடைய தரிசனம் என்ன? அது கர்த்தருடைய வார்த்தையைக் குறித்த பாரமாக இருக்கட்டும். கர்த்தர் நம்முடைய கரங்களில் கொடுத்திருக்கிற இம்மணிநேரத்திற்குரிய செய்தியானது பிரசங்கம் பண்ணுவதன் மூலமோ, அச்சு வடிவிலோ, ஆடியோ விடிவிலோ முன்குறிக்கப்பட்ட ஒவ்வொரு வித்தையும் அடைந்து, அவள் அதை ஏற்றுக்கொண்டு, அதை ஜீவிக்கும்படியாக, இச்செய்தியை எங்கெங்கே கொண்டு

செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் இச்செய்தி போவதைக் காணுவதே என்னுடைய தரிசனமாக இருக்கட்டும். நம்முடைய சகோதரனின் இயற்கையாக சரீரம் கட்டப்படப் போவதை பரிசுத்த ஆவியானவர் தாமே முன்னரே கண்டு, நமது சகோதரனுக்கு அந்த வேதவாக்கியத்தைக் கொடுத்தார்: "**இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை**". பிறகு சகோதரன் காலேப் அவர்களின் இடியோசை போன்ற கட்டளை என்னுடைய ஆத்துமாவில் எதிரொலிப்பதை ஏறக்குறைய என்னால் கேட்க முடிகிறது, அதே பரிசுத்த ஆவியானவரே, "**இந்த வேலையை ஒருபோதும் நிறுத்தி விடாதீர்கள், ஆனால் வெகுவைராக்கியத்தோடு சுறுசுறுப்பாக தொடர்ந்து உறுதியோடு இவைகளை செய்யுங்கள்!**" என்று உரத்த சத்தமிடுவதாக நான் விசுவாசிக்கிறேன்.

நாமும் அந்த அதே பாரத்தை, மனிதனைக் குறித்த பாரம் அல்ல, ஆனால் வார்த்தையைக் குறித்த பாரம்: இம்மணி நேரத்திற்குரிய கர்த்தருடைய வார்த்தையைக் குறித்த பாரத்தைப் பெற்றிருப்போம்.

தேவனுடைய வார்த்தையைக் குறித்து நாம் என்ன செய்யப் போகிறோம்? சகோதரரர்கள் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வரும்படி, நாம் அதிகமதிகமாய் ஜெபித்து விட்டோம்; ஆனால் நாம் அவர்கள் விடுதலை அடைய ஜெபித்து விட்டு, அந்த அடையாளத்திற்குப் பின்னாலிருக்கும் அந்த சத்தத்தை புறக்கணித்து விட்டோமோ என்று உணருகிறேன்: "**இந்த வேலையை ஒருபோதும் நிறுத்தி விடாதீர்கள், ஆனால் வெகுவைராக்கியத்தோடு**

**சுறுசுறுப்பாக தொடர்ந்து உறுதியோடு இவைகளை செய்யுங்கள்!"**

எனவே நாம் நம்முடைய கடமையிலும், நிறைவேற்றும்படியாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு நியமித்துள்ள ஸ்தானத்திலும் மிகவும் வைராக்கியத்தோடு சுறுசுறுப்பாக இருந்து அவருடைய வேலையை செய்து கொண்டிருப்போம். "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், **கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக** (1 கொரி. 15:58)"

நீங்கள் இக்காரியங்களை ஆழமாக சிந்தித்து, இச்சூழ்நிலையில் தேவனுடைய பரிபூரண சித்தத்திற்காக எங்களோடு கூட ஜெபிக்கையில், கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து, உங்கள் இருதயங்களில் பேசுவாராக.

*சகோதரன் மர்பி வோங்*



செய்தி புத்தகங்களை அச்சிடும்படியான உபகரணங்கள்




சீனாவில் அச்சிடப்பட்ட செய்தி புத்தகங்கள்